# தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

(இயக்க ஊர்தி விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம்)

முன்னிலை : **திரு. K. முரளிதரக்கண்ணன், B.A., B.L.,**
தலைமை நீதித்துறை நடுவர்,
பெரம்பலூர்.

(இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாய நடுவர்)

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாள் சனிக்கிழமை.

**இடைநிலை மனு எண்.4/2025–ல்**

**மோ.வா.வி.கோ.அசல் வழக்கு எண்.263/2022**

ரமேஷ்,
த/பெ. ராஜு,
எண்.4/19, வடக்கு தெரு,
தொட்டியப்பட்டி, தேனூர் அஞ்சல்,
பெரம்பலூர் மாவட்டம். **..மனுதாரர்**

**/எதிராக/**

1. V. ஜெயராமன், த/பெ.வீரராகவ பிள்ளை,
   எண்.17/2, திரு.வி.க.நகர், 3 வது குறுக்கு தெரு,
   சென்னை – 600 077.

2. New India Assurance Co. Ltd.,
   Porur Divisional Office (713300),
   80, Arcot Road,
   Porur, Chennai – 600 117

**..எதிர்மனுதாரர்கள்**

இம்மனு என் முன்பாக **24.07.2025** அன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு. A. பிச்சுமணி** அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரரை இத்தீர்ப்பாயத்திற்கு அழைத்தும் முன்னிலையாகாததால், தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு. R. மணிவண்ணன்** அவர்கள் முன்னிலையாகியும், 3–ம் எதிர்மனுதாரரை இத்தீர்ப்பாயத்திற்கு அழைத்தும் முன்னிலையாகாததால், தோன்றாதரப்பினராக்கப்பட்டும், 4–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்

**திரு. S. துரை** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இன்றுவரை பரிசீலனையில் இருந்து இத்தீர்ப்பாயம் வழங்கும்.

## உத்தரவு

இந்த மனுவானது மனுதாரரால் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன் கீழ் அசல் மனுவில் உத்தேச தரப்பினரான 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் கோருரிமை மனுவில் 3, 4 எதிர்மனுதாரர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் இந்த மனுதாரர் அசல் கோருரிமை மனுவில் மனுதாரர் என்றும், கடந்த 14.05.2019–ம் தேதியன்று ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் காயமுற்றதற்கு நஷ்டஈடு கோரி அசல் கோருரிமை மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்கூறிய விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் வாகனமான TN 09 AH 2982 என்ற பதிவெண் கொண்ட Water Tank Lorry இரவு நேரத்தில் எந்தவொரு பாதுகாப்பு உபகரணங்கள் வைக்காமலும், சிக்னல் விளக்கு வைக்காமலும் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டதால், மனுதாரர் ஓட்டிச் சென்ற TN 63 AW 2836 என்ற பதிவெண் கொண்ட TATA 1109 என்ற வாகனம் எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு காயம் ஏற்பட்டதாகவும், மேற்படி விபத்தானது 1–ம் எதிர்மனுதாரரின் வாகனமானது அலட்சியமாக சாலையில் நிறுத்தி வைத்ததால் ஏற்பட்டதாகவும், விபத்து சமயத்தில் மனுதாரர் ஓட்டிச் சென்ற TN 63 AW 2836 என்ற பதிவெண் கொண்ட TATA 1109 என்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் மேற்படி வாகனத்தை காப்பீடு செய்துள்ள காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமான ஒன்றாகும் என்றும், எனவே, விபத்து சமயத்தில் மனுதாரர் ஓட்டிச் சென்ற TN 63 AW 2836 என்ற பதிவெண் கொண்ட TATA 1109 என்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் மேற்படி வாகனத்தை காப்பீடு செய்துள்ள காப்பீட்டு நிறுவனத்தையும் இந்த வழக்கின்

தரப்பினராக சேர்க்க உத்தரவிட வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு பலத்த கஷ்டமும் நஷ்டமும் எற்படும் என்றும், வாதிடப்பட்டுள்ளது.

3. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனு சட்டப்படியும், சங்கதிகளின் படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், தேசிய நெடுஞ்சாலை பாலத்தின் நடுவில் உள்ள பார்க்கிங் இல்லாத பகுதியில் TN 09 AH 2982 பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் அலட்சியமாக வாகனத்தை நிறுத்தியதால் மனுதாரர் நிறுத்தப்பட்டிருந்த லாரியின் பின்னால் திடீரென மோதி விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், மேலும் மனுதாரரே TN 09 AH 2982 பதிவெண் கொண்ட வாகனத்தின் ஓட்டுநர் அலட்சியமாக நிறுத்தியால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொண்டதாகவும், விதிமீறல் வாகனத்தின் உரிமையார்/1–ம் எதிர்மனுதாரர் மற்றும் அந்த வாகனத்தின் காப்பீட்டாளர்/2–ம் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு எதிராக உரிமைகோரல் விண்ணப்பத்தை சரியாக தாக்கல் செய்திருப்பதாகவும், மேற்படி 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்களே உரிமை கோரல் நடவடிக்கைகளில் தேவையான தரப்பினர் என்றும் மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.700/2019 இ.த.ச பிரிவுகள் 283, 337–ன் கீழ் அதே நாளில் விதிமீறல் வாகனத்தின் ஓட்டுநருக்கு எதிராக பூந்தமல்லி மேற்கு போக்குவரத்து புலனாய்வு பிரிவு காவல் நிலையத்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும், முதல் தகவல் அறிக்கை நகல் இத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், விபத்து இரவு 01.30 மணியளவில் நடந்தது என்றும், அது புகாரில் "மேற்படி பூந்தமல்லி பைபாஸ் சாலையில் நிறுத்தக்கூடாத இடத்தில் வாகனத்தை நிறுத்தி எவ்வித பாதுகாப்பு உபகரணங்கள் வைக்காமல் சிக்னல் விளக்குகள் எரிய விடாமலும் எவ்வித செய்கைகளும் காட்டாமலும் இருட்டான சாலையில் வாகனத்தை நிறுத்தி விபத்து ஏற்பட காரணமாக இருந்த வாட்டர் டேங்க் லாரியின் ஓட்டுநர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், 1–ம் எதிர்மனுதாரரின் TN 09 AH 2982 பதிவெண் கொண்ட தண்ணீர் டேங்கர் லாரியின் ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே விபத்து ஏற்பட்டுள்ள நிலையில் உத்தேச தரப்பினர்களான 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எவ்வித இழப்பீடும் கேட்க முடியாது என்றும், எனவே, மனுவை 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், மேலும் மனுதாரர் மோட்டார் வாகனச் சட்டப்பிரிவு 166–ன் கீழ் TN 09 AH 2982 என்ற பதிவெண் கொண்ட தண்ணீர் டேங்கர் லாரி மற்றும் அந்த வாகனத்தின் காப்பீட்டாளர் ஆகியோருக்கு எதிராக கோரிக்கை மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், அசல் மனுவின் வரிசை எண். 23(1)–ல் மனுதாரர் விபத்து நடந்த விதம் மிகவும் சரியானது என்று குறிப்பிட்டுள்ளார் என்றும், நள்ளிரவில் சரியான சமிக்கை வழங்காமல் தேசிய நெடுஞ்சாலை பாலத்தில் அலட்சியமாக நிறுத்தியாதால் மட்டுமே விபத்து நடந்தது என்றும் உரிமை கோரல் மனுவை தாக்கல் செய்யும் போது முன்மொழியப்பட்ட தரப்பினரை எதிர்மனுதாரர்களாக சேர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், குற்றம் சாட்டப்பட்ட வாகனம் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட வாகனத்தின் காப்பீட்டாளருக்கு எதிராக மட்டுமே இழப்பீடு கோரப்பட்டுள்ளது என்றும், எனவே முன்மொழியப்பட்ட தரப்பினர் அவசியமான தரப்பினர் அல்ல என்றும், அவர்களை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும், எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் விபத்து சமயத்தில் மனுதாரர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை அசல் கோருரிமை மனுவில் தரப்பினர்களாக சேர்க்கக் கோரி இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்தானது சாலையில்

எவ்வித பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமலும், குறியீட்டு விளக்குகள் இல்லாமலும், கவனக்குறைவாக 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டதாகவும், அதனை மனுதாரரே ஒப்புக்கொண்டு விட்டதாகவும், மேற்படி விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரே முழுமையான காரணம் என்று மனுதாரரே ஒப்புக் கொண்டுள்ள நிலையில் மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரும், காப்பீட்டு நிறுவனமும் மேற்படி இழப்பீடு கோரும் அசல் மனுவை பொருத்து எவ்வித தொடர்புடமையும் இல்லாத நபர்கள் ஆவார்கள் என்றும், எனவே மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரும், காப்பீட்டு நிறுவனமும் அசல் கோருரிமை மனுவை பொருத்து தேவையற்ற தரப்பினர்கள் என்றும், கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யும் பொழுது 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கத்தக்கதாகவே உள்ளது. இருப்பினும், விபத்து சம்பவத்தை பொருத்து 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கும் சூழ்நிலையில் மேற்படி மனுதாரர் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளரும், காப்பீட்டு நிறுவனமும் அசல் கோருரிமை மனுவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டால் மட்டுமே விபத்து தொடர்பான கவனக்குறைவு மற்றும் இழப்பீடு செலுத்துவதற்கான பொறுப்பு ஆகிய பொருண்மைகள் குறித்து இத்தீர்ப்பாயம் தெளிவான தீர்வு காண இயலும் என்றும், மேற்படி உத்தேச தரப்பினர்கள் அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டால் மட்டுமே விபத்து குறித்த உண்மைகள் முழுமையாக தெரியவரும் என்றும், இத்தீர்ப்பாயம் கருதுகிறது. அதனடிப்படையில் உத்தேச தரப்பினர்களான 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் அசல் கோருரிமை வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்று இத்தீர்ப்பாயம் கருதுகிறது. அதனடிப்படையில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கது என்றே இம்மனு பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, மனுதாரரின் மனு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், **2025–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20–ம் நாள்** இத்தீர்ப்பாயத்தில் முத்திரையுடன் என் கையொப்பமிட்டு வழங்கப்பட்டது.

MURALITHARAKANNAN K

CHIEF JUDICIAL MAGISTRATE
Digitally signed by MURALITHARAKANNAN K
Location: PERAMBALUR
Date: 2025.09.20 17:37:42 +0530

**இயக்க ஊர்தி விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி/ தலைமைக் நீதித்துறை நடுவர், பெரம்பலூர்.**